# அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில், ஸ்ரீரங்கம்

**ஒப்பந்த வேலை வாய்ப்பு விண்ணப்பம் (Consolidated Employment) – மருத்துவ அலுவலர்**

விண்ணப்பதாரரின்
புகைப்படம்
சான்றொப்பத்துடன்

| | | |
|---|---|---|
| 1 | பதவியின் பெயர் | : |
| 2 | மனுதாரரின் பெயர் | : |
| 3 | தந்தையின் பெயர் | : |
| 4 | நிரந்தர முகவரி | : |
| 5 | மதம் | : |
| 6 | பிறந்த தேதி மற்றும் வயது (பள்ளி சான்று நகல் இணைக்கப்பட வேண்டும்) | : |
| 7 | கல்வித் தகுதி (நிர்ணயிக்கப்பட்ட கல்வி தகுதிக்கான சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்) | : |
| 8 | மருத்துவமனைகளில் பணிபுரிந்த முன் அனுபவம் இருப்பின் சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும் | : |
| 9 | நன்னடத்தைச் சான்று (அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகளிடமிருந்து) | : |
| 10 | மருத்துவ தகுதிச்சான்று | : |
| 11 | தொலைபேசிஎண் | : |
| 12 | Whatsapp Number | : |
| 13 | மின்னஞ்சல் முகவரி | : |

மேலே கூறப்பட்ட வரிசை எண் 01 முதல் 13 வரையிலான விவரங்கள் அனைத்தும் உண்மையானவை என்றும், நான் இந்து மதத்தைச் சார்ந்தவர் என்றும் இதன் மூலம் உறுதியளிக்கிறேன்.

நாள் :

விண்ணப்பதாரரின் கையொப்பம்
(பதிவு எண் பொறிக்கப்பட்ட முத்திரையுடன்)

இடம் :

# நிபந்தனைகள்
# (மருத்துவ அலுவலர்)

1. விண்ணப்பதாரர் இந்து மதத்தை சார்ந்தவராகவும், தமிழ்நாட்டை சார்ந்தவராகவும் இருக்க வேண்டும்.

2. விண்ணப்பதாருக்கு நடப்பாண்டு ஜுலை மாதம் முதல் தேதியன்று 35 வயதுக்குட்பட்டவராக இருக்க வேண்டும்.

3. தொற்று நோய் உடல் அல்லது மனநிலை குன்றிய குறைபாடுகள், நீதிமன்றத்தில் தண்டனை அடைந்தவர்கள், பட்ட கடனை தீர்க்க முடியாதவர்கள் என நீதிமன்றத்தில் தீர்மானிக்கப்பட்டவர்கள், அரசுப்பணிகள், பொது ஸ்தாபனங்கள் மற்றும் வேறு இடங்களில் பணிபுரிந்து தண்டனை காரணமாக பணி நீக்கம் செய்யப்பட்டவர்கள் ஆகியோர்கள் மேற்படி பணிக்கு விண்ணப்பிக்கத் தகுதியற்றவர்கள்.

4. நன்னடத்தை உடையவராக இருக்க வேண்டும். இதற்கு அரசிதழ் பதிவு பெற்ற அரசு அலுவலரிடமிருந்து பெறப்பட்ட நன்னடத்தைச் சான்று (விளம்பர தேதிக்கு பின்னர் பெறப்பட்டது) பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.

5. இந்த வேலை வாய்ப்பு அறிவிப்பு வெளியிடும் தேதிக்கு முன்னதாக வரப்பெற்ற விண்ணப்பங்களும், 25.11.2021–ம் தேதி மாலை 5.45 மணிக்கு பின்னர் வரப்பெறும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

6. விண்ணாப்பதாரர்கள் மருத்துவ அலுவலர் பதவிக்குரிய கல்வி மற்றும் இதர தகுதி சான்றுகள் மற்றும் இதர விவரங்களுடன் தனித்தனியாக விண்ணப்பிக்க வேண்டும்.

7. விண்ணப்பம் அனுப்பப்படும் மேலுறையின் மீது கண்டிப்பாக பதவியின் பெயர் குறிப்பிட்டு அனுப்பப்பட வேண்டும்.

8. வரப்பெறும் விண்ணப்பங்கள் அனைத்தும் சரிப்பார்க்கப்பட்டு தகுதியுள்ள நபர்களுக்கு மட்டுமே நேர்முகத் தேர்வுக்கு அழைப்பு அனுப்பப்படும்.

9. நேர்முக தேர்விற்கு அழைக்கப்படும் விண்ணப்பதாருக்கு பயணப்படி ஏதும் வழங்கப்பட மாட்டாது.

10. நேர்முக தேர்வில் தேர்ந்தெடுக்கப்படும் நபர்களின் விண்ணப்பங்களில் தவறான தகவல் கொடுக்கப்பட்டிருப்பது பின்னாளில் தெரிய வந்தால் பணி நீக்கம் செய்ய எவ்வித காரணங்களும் கூறாமல் நடவடிக்கை எடுக்க திருக்கோயில் நிர்வாகத்திற்கு உரிமை உண்டு.

11. தேர்வு செய்யப்படும் நபருக்கு சென்னை இந்து சமய அறநிலையத்துறை ஆணையரின் அங்கீகாரத்திற்கு பின்பே பணி ஆணை வழங்கப்படும்.

12. விண்ணப்பதாரர் நல்ல தேக ஆரோக்கியம் உள்ளவராக இருக்க வேண்டும். மருத்துவசான்று இணைக்கப்பட வேண்டும்.

13. விண்ணப்பங்களுடன் அனுப்பப்படும் அனைத்துச் சான்றிதழ்களும் அரசு பதிவு பெற்ற அலுவலர் சான்றொப்பம் பெறப்பட்ட ஒளி நகல்களாக மட்டுமே இருக்க வேண்டும். அசல் சான்றிதழ்கள் அனுப்ப கூடாது.

14. அசல் சான்றிதழ்கள் அனைத்தும் நேர்முக தேர்விற்கு அழைக்கும் போது எடுத்து வர வேண்டும்.

15. விண்ணப்ப படிவத்தில் விண்ணப்பதாரர்கள் புகைப்படம் ஒட்டப்பட்டு அதில் அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர் சான்றொப்பம் பெறப்பட வேண்டும்.

16. காவல்துறை சான்று (விளம்பர தேதிக்கு பின்னர் பெறப்பட்டது) இணைக்கப்பட வேண்டும்.

17. விண்ணப்பங்களுக்கு கட்டணம் கிடையாது. விண்ணப்பப்படிவம் www.srirangam.org என்கிற இணையதள முகவரியில் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில், ஸ்ரீரங்கம் பெயரில் உள்ள பக்கத்தில் விண்ணப்பங்கள் ஆன்லைன் மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

18. விண்ணப்ப படிவங்கள் மற்றும் நிபந்தனைகளை திருக்கோயில் இணைய தளத்தில் (www.srirangam.org) பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

19. Medical Council–ல் பதிவு செய்த சான்று இணைக்கப்பட வேண்டும்.

20. விண்ணப்பதாரர் விண்ணப்பிக்க வேண்டிய முகவரி

இணைஆணையர் / செயல் அலுவலர்,
அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில்,
ஸ்ரீரங்கம், திருச்சிராப்பள்ளி மாவட்டம் – 620 006.

அர.சுதர்சன்
தக்கார் / இணை ஆணையர்
இந்து சமய அறநிலையத்துறை, திருச்சிராப்பள்ளி.

செ. மாரிமுத்து, பி.ஏ., பி.எல்.,
இணை ஆணையர் / செயல் அலுவலர்